A

# ஆண்டு இறுதித்தேர்வு – 2024

வகுப்பு : 8

## தமிழ்

காலம் : 2.30 மணி மதிப்பெண்கள் : 100

### பகுதி – I

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 10 × 1 = 10

1. தமிழ் எழுத்துச் சீர்திருத்தப் பணியில் ஈடுபட்டவர் ___________.
   அ) பாரதிதாசன் ஆ) தந்தை பெரியார்
   இ) வ.உ.சிதம்பரனார் ஈ) பெருஞ்சித்திரனார்

2. நெடுமை + தேர் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் எது?
   அ) நெடுதேர் ஆ) நெடுத்தேர்
   இ) நெடுந்தேர் ஈ) நெடுமைதேர்

3. மாணிக்கம் தமிழ்ப்பாடம் படித்தான். இத்தொடரில் உள்ள வினைமுற்று யாது?
   அ) படித்தான் ஆ) மாணிக்கம்
   இ) பாடம் ஈ) தமிழ்

4. காந்தியடிகள் ___________ போற்ற வாழ்ந்தார்.
   அ) நிலம் ஆ) வையம்
   இ) களம் ஈ) வானம்

5. வல்லுருவம் என்னும் சொல்லைப் பிரித்தெழுதக் கிடைப்பது எது?
   அ) வல் + உருவம் ஆ) வன்மை + உருவம்
   இ) வல்ல + உருவம் ஈ) வல்லு + உருவம்

6. 'சேகரமாய் வைத்த மரங்கள்' - சேகரம் என்ற சொல்லின் பொருள் என்ன?
   அ) வரிசை ஆ) முறை
   இ) கூட்டம் ஈ) புதிது

7. புகழாலும் பழியாலும் அறியப்படுவது ___________ ஆகும்.
   அ) அடக்கமுடைமை ஆ) நாணுடைமை
   இ) நடுவுநிலைமை ஈ) பொருளுடைமை

8. 'கண்ணோடாது' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது
   அ) கண் + ஓடாது ஆ) கண் + ணோடாது
   இ) க + ஓடாது ஈ) கண்ணோ + ஆடாது

9. முதல் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது எது?
   அ) எதுகை ஆ) மோனை
   இ) இயைபு ஈ) அந்தாதி

10. பிறிது மொழிதல் அணியில் __________ மட்டுமே இடம்பெறும்.
   அ) உவமை ஆ) இயைபு
   இ) தொடை ஈ) சந்தம்

Kindly send me your key answers to our email id - padasalai.net@gamil.com

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக.** 5 × 1 = 5

11. அரசரை அவரது ________________ காப்பாற்றும்.

12. மக்கள் வாழும் நிலப்பகுதியைக் குறிக்கும் சொல் ________________.

13. என்று + ஆய்ந்து என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ________________.

14. குறிப்பு வினையெச்சம் _____________ வெளிப்படையாகக் காட்டாது.

15. அம்பேத்கர் நிறுவிய அரசியல் கட்சியின் பெயர் _________________.

**III. பொருத்துக.** 5 × 1 = 5

| | | | |
|---|---|---|---|
| 16. | எடுத்தனன் உண்டான் | – | நாவின் நுனி, அண்ணத்தின் நுனி |
| 17. | இரட்டுறமொழி | – | தூங்கலோசை |
| 18. | ட், ண் | – | செப்பலோசை |
| 19. | வஞ்சிப்பா | – | முற்றெச்சம் |
| 20. | வெண்பா | – | சிலேடை |

## பகுதி – II

**IV. அடிபிறழாமல் எழுதுக.** 4 + 2 = 6

21. "ஒன்றே குலம்"...எனத் தொடங்கும் திருமந்திரப் பாடலின் முதல் நான்கு அடிகள். **(அல்லது)**
"வாழ்க நிரந்தரம்" எனத் தொடங்கும் தமிழ்மொழி வாழ்த்துப் பாடல்.

22. "விடல்" என முடியும் திருக்குறள்.

## பகுதி – III

**V. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க.** 5 × 2 = 10

23. சான்றோர்களுக்கு அழகாவது எது?

24. நீலகேசியில் பிறவித் துன்பத்தைத் தீர்க்கும் மருந்துகளாகக் கூறப்படுவன யாவை?

25. நட்பு எதற்கு உரியது என்று திருவள்ளுவர் குறிப்பிடுகிறார்?

26. 'புலித்தோல் போர்த்திய பசு' என்னும் உவமையால் விளக்கப்படும் கருத்து யாது?

27. ஓலைச்சுவடிகளில் நேர்கோடுகள், புள்ளிகள் ஆகியவற்றைப் பயன்படுத்த இயலாமைக்குக் காரணம் என்ன?

28. சிறந்த சொல்லாற்றலின் இயல்பு என்ன?

29. அரசன் தண்டிக்கும் முறை யாது?

Kindly send me your key answers to our email id - padasalai.net@gamil.com

www.Padasalai.Net

**VI. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க.** $5 \times 2 = 10$

30. 'இரவுபகல்' என்பது எவ்வகைத் தொடர் என விளக்குக.
31. பா எத்தனை வகைப்படும்? அவை யாவை?
32. 'மரக்கட்டில்' – இச்சொல்லைப் பிரித்து எழுதிப் புணர்ச்சியை விளக்குக.
33. எழுத்துகளின் பிறப்பு என்றால் என்ன?
34. வியங்கோள் வினைமுற்று விகுதிகள் யாவை?
35. வேற்றுமை அணி என்றால் என்ன?
36. வல்லினம் மிகாத் தொடர்கள் மூன்று எழுதுக.

**VII. எவையேனும் ஆறு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க.** $6 \times 3 = 18$

37. தமிழ்மொழியை வாழ்த்தி பாரதியார் கூறும் கருத்துகளை எழுதுக.
38. பள்ளிக் குழந்தைகளுக்கு மருத்துவர் கூறும் அறிவுரைகள் யாவை?
39. கோணக்காற்றால் வீடுகளுக்கு ஏற்பட்ட பாதிப்புகள் யாவை?
40. நோயின் வகைகள், அவற்றைத் தீர்க்கும் வழிகள் பற்றி நீலகேசி கூறுவன யாவை?
41. மூங்கிலால் செய்யப்படும் பொருள்கள் குறித்து எழுதுக.
42. மனிதர்களிடம் குவிந்திருக்கும் பண்புகளாகக் கன்னிப்பாவை நூல் கூறுவன யாவை?
43. அயோத்திதாசரின் இதழ்ப்பணி பற்றி எழுதுக.
44. எழுத்துச் சீர்திருத்தத்தின் தேவை குறித்து எழுதுக.

## பகுதி – IV

**VIII. எவையேனும் ஆறு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க. (மொழிப்பயிற்சி வினாக்கள்)** $6 \times 2 = 12$

45. சரியான மரபுச் சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக.
    (அ) ஆ _____ (நிரை/மந்தை)
    (ஆ) பால் _____ (குடி/பருகு)
46. வினைமுற்றுக்கு உரிய வேர்ச்சொல்லை எழுதுக.
    (அ) பேசினாள் _____
    (ஆ) கேட்டார் _____
47. உவமைத் தொடரைப் பயன்படுத்தித் தொடர் அமைக்க.
    (அ) கிணற்றுத் தவளை போல
48. கலைச்சொல் எழுதுக.
    (அ) Millets
    (ஆ) Dyeing

www.Padasalai.Net

49. கோடிட்ட இடங்களில் பொருத்தமான சொல்லுருபுகளை இட்டு எழுதுக.

**(கொண்டு, காட்டிலும், நின்று, உடன்)**

(அ) இடி ______ மழை வந்தது.

(ஆ) தமிழைக் ______ சுவையான மொழி உண்டோ?

50. பின்வரும் வினாக்களைப் படித்து இரு வினாக்களுக்கு ஒரு விடை தருக.

(அ) வானில் தேய்ந்து வளர்வது எது? வாரம் நான்கு கொண்டது எது?

(ஆ) ஆடை நெய்வது எதனாலே? அறிவைப் பெறுவது எதனாலே?

51. குறளை முறைப்படுத்தி எழுதுக.

தகவிலர் தக்கார் என்பது அவரவர்
எச்சத்தால் காணப் படும்.

## பகுதி – V

**IX. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.** 3 × 8 = 24

52. அ) எம்.ஜி.ஆரின் பண்பு நலன்களை விளக்கி எழுதுக.

**(அல்லது)**

ஆ) தமிழர் மருத்துவத்தின் சிறப்புகளாக மருத்துவர் கூறும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.

53. அ) "வெட்டுக்கிளியும் சருகுமானும்" கதையைச் சுருக்கி எழுதுக.

**(அல்லது)**

ஆ) தமிழர்களின் இசைக் கருவிகளுள் எவையேனும் ஐந்து கருவிகளின் செய்திகளைத் தொகுத்து எழுதுக.

54. அ) இருப்பிடச் சான்று வேண்டி வட்டாட்சியருக்கு விண்ணப்பம் எழுதுக.

**(அல்லது)**

ஆ) கொடுக்கப்பட்ட குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.

நூலகம் – முன்னுரை – நூலகத்தின் தேவை – வகைகள் – நூலகத்தில் உள்ளவை – படிக்கும் முறை–முடிவுரை

www.Padasalai.Net